# முகவுரை

க. பொ. த (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு உதவும்
பொருட்டுப் பத்தாண்டுகளுக்கு முன் என்னால் எழுதப்பட்ட
இலக்கணத்தெளிவு, திருத்திய மூன்றாம் பதிப்பாக இன்று வெளி
யாகின்றது

தமிழிலக்கணத் தொடக்கக் கல்விக்கு இன்றியமையாதனவும்
வேண்டியனவுமெனக் கருதப்பட்டவற்றைத் தம் நுண்மாண் நுழை
புலங் கொண்டும் சற்பித்தலநுபவம் கொண்டும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக
நாவலரவர்கள் எழுதிய 'இலக்கணச்சுருக்கம்', அவ்வகையில்
வெளியான நூல்கள் யாவிலும் தலை சிறந்தது என்பதை மொழி
யியலாருட்பட மறுப்பார் எவருமிலர்.

ஆனால் 'இலக்கணச்சுருக்கம்' புதிய பதிப்புக்கள் வெளிவராத
நிலையிலே தடுமாறிக் கொண்டிருந்த உயர்வகுப்பு மாணவர்க
ளுக்கு அறுசுவை உணவில்லாத போழ்து சிறிதாயினும் பசிபோக்க
வென்று நான் அளித்த கஞ்சித் தெளிவே இலக்கியத்தெளிவு.
அன்றியும் பரீட்சை வினாக்களாய் வரும் இக்காலப் பிரயோகம்
முதலிய சிலவும் மேலதிகமாகச் சேர்த்ததால் என் தெளிவிலே சில
சோற்றுப் பருக்கைகளும் காணப்படும்.

இதன் மூன்றாம் பதிப்பிலே பல திருத்தங்கள் மேற்கொள்ளப்
பட்டன. மனனம் செய்வதற்கெனப் பிற்சேர்க்கையாய்த் தரப்
பட்டிருந்த நூற்பாக்கள் இப்பதிப்பில் அவ்வப் பொருள்களோடு
இணைக்கப்பட்டுள்ளதோடு மேலும் சில இன்றியமையாச் சூத்தி
ரங்களும் சேர்க்கப்பட்டுள்ளமை இத்திருத்தங்களில் முதன்மையான
தெனலாம். ''விடயத்தோடு இணைத்து மனனம் செய்வதையே
மாணவர் விரும்புவர். தனித்த பிற் சேர்க்கைகளில் அவர்களின்
கருத்துச் செல்லாது'' என்று தமது நல்லாசிரியத் தகைமை துலங்க
அறிவுரை பகர்ந்து என்னை நெறிப்படுத்திய பண்டிதர்
சு. வேலுப்பிள்ளை (சு. வே) அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்
இம்முறை அடிக்குறிப்புகள் கூடுதலாக அமைந்தமைக்குக் காரணம்
உ/த மாணவர் மட்டுமன்றி வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவரும்
இக் குறிப்புக்களைக் குறிப்புக்களாகவே கொண்டு அவை தொடர்
பான மேலதிகமானவற்றை அறிய முற்பட உதவுதலே. அறிஞர்கள்
சிலரால் சுட்டிக் காட்டப்பட்ட குற்றங்குறைகள் இம்முறை
திருத்தப் பெற்றுள்ளன. அவ்வறிஞர்களுக்கும் என் நன்றி
உரியது. எதிர்காலத்திலும் அவர்கள் இவ்வாறு செய்வது
எனக்குப் பேருதவியாயிருக்கும். 'நகுதற் பொருட்டன்று நட்டல்'
வாக்கியவியல் என்ற பகுதி பரீட்சைத் தேவைகளுக்கு வேண்டாத
தென்று உணரப்பட்டதால் இப்பதிப்பில் அது இடம்பெறவில்லை.
பொருள் அட்டவணை ஒன்று புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் போல என் நூல்களைச் சரவைபார்த்தும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியும் உதவிய நண்பர் மயிலங் கூடலூர் பி. நடராசன் அவர்களுக்கு அன்பு கனிந்த நன்றிகள் உரியன.

சரவை பார்ப்பதில் நுண்ணிய நோக்கு நண்புருடையதாகும் இம்முறை துணைநோக்களிப்பவளாய் என்மகள் வாசுகி வாய்த்தாள் எனவே இருவர் நோக்கும் இரு கண்களாகி இப்பதிப்பில் எழுத்துப் பிழைகள் அதிகம் வராது காத்தன. ஆனால் 'அழுக்கா றென ஒரு பாவி' என்றாங்கு அச்சுப்பொறியென ஒரு பாவி ஆங்காங்கே சில எழுத்துக்களை விழுங்கிவிட்டது அவ்வாறு மூளியான இடங்களுக்கு மூன்று உதாரணங்கள் வருமாறு

(i) (வா ழ்த் + உ- (அச்சுப்பிடிக்காத எழுந்து வா பக்கம் 19

(ii) ஆங்கில (எ)ழுத்துக்கள்- (அச்சுப்பிடிக்காத எழுத்து எ பக்கம் 21.

(iii) ப ப் |.| ர் – ( |.| |.| |.| ர் என முதற்'ப' வும் இரண்டாம்'ப'வும் உட்பெறுபுள்ளி பெற்றிருத்தல் வேண்டும்) பக் 22

இவை குறைகளேயன்றிக் குற்றங்களல்ல. படிக்கும்பொழுது எழுத்துப் பதியாத இடங்களிலே அவ்விடங்களுக்குரிய எழுத்துக்களை எழுதியிட்டுக் கொண்டு வாசிக்குமாறு இந்நூலைப் பயன் செய்வோரை வேண்டுகிறேன். எழுத்துக்கள் இடம் மாறியோ, சொற்பிழையோடு கூடியோ வந்த சிலவும் உள.

| | | | |
|---|---|---|---|
| உ-ம்: பொருன்- | பொருள் | பக். | 101 |
| பாட்டும்- | பாட்டு | பக். | 104 |

இவை மிகச் சிலவேயாதலின் அவற்றிற்குத் தனித்துப் பிழை திருத்தம் என்று ஒரு பகுதி தரப்படவில்லை. அவ்வெழுத்துப் பிழைகள் கருத்துக்கு இடையூறாகா.

'என்றும் உதவும் கனி'யாகத் தம் பேரனார் அமரர் ஆ. சுப்பிரமணியம் அவர்களின் கீழ்நின்று வளர்ந்து வரும் பழக்கன்றான திரு. தி. ஜெயராசா (ஜெகன் - அதிபர், ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், புத்தகசாலை) அவர்கள் இந்நூலை மூன்றாம் பதிப்பாய் வெளியிட முன்வந்துள்ளமைக்கும் நூலை மிகவிரைவாக வெளிக்கொணர்வதில் அச்சக ஊழியர்கள், முன்வந்து உழைத்தமைக்கும் அவர்களை ஊக்குவித்துச் செயற்படுத்திய திரு ம. அருளானந்தம் அவர்களுக்கும் என் சிறப்பு நன்றிகள் உரியன.

நாயன்மார்கட்டு. க. சொக்கலிங்கம்

30-12-92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளட்டவணை


I. எழுத்தியல்: — பக்கம்

முதலெழுத்துக்கள் 1
மாத்திரை 2
இனவெழுத்துக்கள் 3
சார்பெழுத்துக்கள் 3
உயிர்மெய் 3
ஆய்தம் 4
உயிரளபெடை 4
சொல்லிசையளபெடை 5
இன்னிசையளபெடை 6
ஒற்றளபெடை 6
குற்றியலிகரம் 6
குற்றியலுகரம் 7
ஐகாரக் குறுக்கம் 8
ஔகாரக் குறுக்கம் 9
மகரக் குறுக்கம் 9
ஆய்தக் குறுக்கம் 9
சார்பெழுத்துக்கள் பற்றிய கருத்து முரண்பாடுகள் 10
சுட்டெழுத்துக்கள் 11
வினாவெழுத்துக்கள் 12
போலியெழுத்துக்கள் [சந்தியக்கரம்] 13
மொழியிறுதிப் போலி 13
மொழியிடைப் போலி 13
மொழிமுதற் போலி 13
எழுத்துக்களின் சாரியைகள் 13
எழுத்துக்கள் சொற்களில் அமையும் போது நிகழும் ஒலிநுட்ப வேறுபாடுகள் 14
மொழியின் முதலில் வரும் எழுத்துக்கள் 15
காலத்துக்குக் காலம் மொழிமுதலெழுத்துக்கள் பற்றிய கருத்து மாற்றங்கள் 17
மொழியின் இடையில் வரும் எழுத்துக்கள் 18
மூன்று ஒற்றுக்கள் மயங்கும் வகை 19
மொழியிறுதியில் வரும் எழுத்துக்கள் 20
தமிழிலே வழங்கும் வடமொழி எழுத்துக்கள் 21
ஆங்கில எழுத்துக்களுக்கு மாற்றெழுத்துக்கள் 21
எழுத்தின் வரிவடிவ மாற்றம் 22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்


II. பிறப்பியல்

எழுத்துக்கள் தோன்றும் வகை 23
உயிரெழுத்துக்களின் பிறப்பு 24
மெய்யெழுத்துக்களின் பிறப்பு 24

III. சொல்லியல்

பெயர்ச்சொல் 25
இடுகுறிப் பொதுப் பெயர் 26
இடுகுறிச் சிறப்புப் பெயர் 26
காரணப் பொதுப் பெயர் 27
காரணச் சிறப்புப் பெயர் 27
காரண இடுகுறிப் பெயர் 27
இடுகுறி மரபுப் பெயர் 27
காரண மரபுப் பெயர் 27
இடுகுறி ஆக்கப் பெயர் 27
காரணவாகிகப் பெயர் 28
பெயர்கள் திணை பால் எண் இடம் ஏற்றல் 28
பால் 29
பால்காட்டும் விகுதிகள் 30
பால்காட்டும் விகுதிகளுள் அடங்காத ஆண்பால் பெண்பாற் பெயர்கள் 30
ஆண்பால் பெண்பால் என வகுக்க இயலாதவை 31
விரவுத்திணைப் பெயர்கள் 31
பால்பகா அஃறிணைப் பெயர் 32
பாற்பொதுப் பெயர் (உயர்திணை) 32
மரியாதைப் பன்மை 33
இடம் 34
தன்மைப்பெயர் 34
முன்னிலைப் பெயர் 35
படர்க்கைப் பெயர் 35
அறுவகைப் பெயர்களுள்ளும் அமைந்து கிடக்கும் உறுப்புக்கள் 35
பெயர்ச் சொற்களின் பகுதிகள் 36
தொழிற்பெயர் பண்புப்பெயர் ஆகிய இரு பெயர்களதும் சிறப்பியல்புகள் 36
பெயர்ச் சொற்களில் வரும் இடைநிலைகள் 37
பெயர்ச் சொற்களில் வரும் சாரியைகள் 37
பண்புப் பெயர் விகுதிகள் 37
தொழிற் பெயர் விகுதிகள் 38


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்கம் |
|---|---|
| காலங்காட்டும் தொழிற் பெயர் | 39 |
| முதனிலைத் தொழிற் பெயர் | 39 |
| பெயர்ச் சொற்கள் குறிப்புப்பொருள் தருதல் | 39 |
| ஒன்றொழி பொதுச் சொல் | 40 |
| விகாரம் | 40 |
| தகுதி | 41 |
| இடக்கரடக்கல் | 41 |
| மங்கலம் | 41 |
| குழூஉக்குறி | 41 |
| ஆகுபெயர் | 41 |
| பொருளாகுபெயர் | 42 |
| சினையாகுபெயர் | 42 |
| இடவாகுபெயர் | 42 |
| தானியாகுபெயர் | 42 |
| காலவாகுபெயர் | 42 |
| குணவாகுபெயர் | 42 |
| தொழிலாகுபெயர் | 43 |
| எண்ணலளவையாகுபெயர் | 43 |
| எடுத்தலளவையாகுபெயர் | 43 |
| முகத்தலளவையாகுபெயர் | 43 |
| நீட்டலளவையாகுபெயர் | 43 |
| சொல்லாகுபெயர் | 43 |
| கருவியாகுபெயர் | 43 |
| காரியவாகுபெயர் | 44 |
| கருத்தாவாகுபெயர் | 44 |
| உவமையாகுபெயர் | 44 |
| அடையடுத்தஆகுபெயர் | 44 |
| இருமடியாகுபெயர் | 44 |
| மும்மடியாகுபெயர் | 44 |
| முதற்குறிப்பு | 45 |
| தொகைக்குறிப்பு | 45 |
| பிற குறிப்பு | 45 |
| வேற்றுமை | 45 |
| முதலாம் வேற்றுமை | 46 |
| இரண்டாம் வேற்றுமை | 46 |
| மூன்றாம் வேற்றுமை | 47 |
| நான்காம் வேற்றுமை | 48 |
| ஐந்தாம் வேற்றுமை | 49 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்கம் |
|---|---|
| ஆறாம் வேற்றுமை | 51 |
| ஏழாம் வேற்றுமை | 53 |
| எட்டாம் வேற்றுமை | 54 |
| வேற்றுமை மயக்கம் | 55 |
| பொருள் மயக்கம் | 65 |
| உருபு மயக்கம் | 56 |
| பெயர்கள் வேற்றுமையுருபை ஏற்கும்போது அடையும் மாற்றங்கள் | 56 |
| பெயர்கள் சாரியைகளை ஏற்றல் | 57 |
| வினைச்சொல் | 61 |
| வினைச் சொற்களின் உறுப்புக்கள் | 61 |
| தெரிநிலைவினையும் குறிப்புவினையும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காட்டுவன | 63 |
| வினைச் சொல்லின் பாகுபாடு | 64 |
| வினைமுற்று | 64 |
| தெரிநிலை வினைமுற்று | 65 |
| குறிப்பு வினைமுற்று | 65 |
| பெயரெச்சம் | 66 |
| வினையெச்சம் | 65 |
| காலங்காட்டும் இடைநிலைகள் | 66 |
| காலம்காட்டும் விகுதிகள் | 68 |
| எதிர்காலம் காட்டும் ஏவல் வினை விகுதிகள் | 69 |
| வியங்கோள் வினை விகுதிகள் | 69 |
| காலங்காட்டும் பகுதிகள் | 70 |
| வினைமுற்றுக்களும் பால்காட்டும் விகுதிகளும் | 71 |
| பால்காட்டும் வினைமுற்று விகுதிகள் | 72 |
| பால்வெளிப்படாது வரும் தன்மை முன்னிலை வினைகளுக்கான விகுதிகள் | 73 |
| எதிர்மறை வினைமுற்று | 74 |
| ஏவல் வினைமுற்று | 75 |
| வியங்கோள் வினைமுற்று | 76 |
| ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் ஒற்றுமை வேற்றுமை | 77 |
| செய்யும் என்ற வினைமுற்று | 78 |
| இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் குறிப்பு வினைமுற்று | 78 |
| பெயரெச்சம் | 79 |
| தெரிநிலைவினைப் பெயரெச்சம் | 79 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்கம் |
|---|---|
| குறிப்புவினைப் பெயரெச்சம் | 80 |
| வினையெச்சம் | 81 |
| வினையெச்சங்களும் முடிக்கும் சொற்களும் | 82 |
| செய்து என்னும் வாய்பாட்டுத் தெரிநிலைவினை வினையெச்சம் பெறும் விகற்பங்கள் | 83 |
| 'செய' என்னும் எச்சம் | 84 |
| 'செயின்' என்னும் எச்சம் | 85 |
| முற்றுவினை | 86 |
| முற்றுவினை எச்சப்பொருள் தரல் | 86 |
| செயப்படுபொருள் குன்றிய வினையும் செயப்படுபொருள் குன்றாத வினையும் | 87 |
| தன்வினை | 87 |
| பிறவினை | 88 |
| தன்வினை பிறவினையாய் ஆக்கப்படும் வகை | 88 |
| செய்வினை | 89 |
| செயப்பாட்டுவினை | 90 |
| துணைவினைமுற்று | 90 |
| வினையாலணையும் பெயர் | 91 |
| தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் | 92 |
| இடைச்சொல் | 92 |
| பகுபத உருபிடைச் சொல் | 92 |
| வேற்றுமை உருபிடைச் சொல் | 92 |
| உவம உருபிடைச் சொல் | 92 |
| தத்தமக்குரிய பொருள் குறிக்கும் இடைச்சொற்கள் | 93 |
| ஏகார இடைச் சொல் | 93 |
| ஓகார இடைச்சொல் | 94 |
| உம்மை இடைச்சொல் | 94 |
| முற்றும்மை பற்றிய சிறப்புவிதி | 95 |
| 'என', 'என்று' இடைச்சொற்கள் | 96 |
| 'கொல்' என்னும் இடைச்சொல் | 97 |
| 'மற்று' இடைச்சொல் | 97 |
| 'மன்' இடைச்சொல் | 97 |
| தொறும், தோறும் இடைச்சொற்கள் | 98 |
| 'மட்டும்', 'மட்டு' இடைச்சொற்கள் | 99 |
| 'இனி' என்ற இடைச்சொல் | 99 |
| 'முன்பு' 'பின்பு' 'முன்' 'பின்' இடைச்சொற்கள் | 99 |
| 'வாளா' 'சும்மா' இடைச்சொற்கள் | 99 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

ஆவது, ஆதல், ஆயினும், நான், அல்லது குறிப்பின் வரும் இடைச்சொற்கள் 100
உரிச்சொற்கள் 100
ஒரு சொல் பல பொருள் தரும் உரிச்சொல் 101
பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொல் 101
நான்குவகைச் சொற்கள் 102
இயற்சொல் 102
திரிசொல் 102
வடசொல் 102
"தற்சமம்" 102
"தற்பவம்" 103
திசைச் சொல் 103

IV. சொற்றொடரியல்

சொற்றொடரும் வாக்கியமும் 105
தொகைநிலைத் தொடர் 108
எழுவாய்த் தொடர் 108
விளித் தொடர் 108
வேற்றுமைத் தொடர் 108
வினைமுற்றுத் தொடர் 108
பெயரெச்சத் தொடர் 108
வினையெச்சத் தொடர் 108
இடைச் சொற்றொடர் 109
உரிச் சொற்றொடர் 109
அடுக்குத் தொடர் 109
தொகைநிலைத் தொடர் 109
வேற்றுமைத் தொகை 109
வினைத் தொகை 110
பண்புத் தொகை 110
இருபெயரொட்டுப் பண்புத் தொகை 110
உவமைத் தொகை 110
உம்மைத் தொகை 110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணத் தெளிவு

## 1. எழுத்தியல்

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

(நன்னூல், எழுத்ததிகாரம், எழுத்தியல் 3)

ஆக்கப்படும் எப்பொருளும் மூன்று காரணங்களது சேர்க்கையால் ஆவதே. நிமித்தகாரணம், முதற்காரணம், துணைக் காரணம் என அவை பெயர் பெறும்.

1. நிமித்தகாரணம்:- பொருளை இயற்றும் கருத்தா (செய்பவன்)
2. முதற்காரணம்:- மூலப்பொருள்
3. துணைக்காரணம்:- பொருளை ஆக்க உதவும் கருவிகள்.

மொழி மனிதனால் ஆக்கப்படுவது எனவே அதனைப் பேசுபவன் நிமித்த காரணன். அவன் பேசுவதற்கு எழுத்து முதற் காரணம் உணர்வு, சிந்தனை, நா என்பன துணைக் காரணங்கள்.

ஆகவே மொழிக்கு முதற் காரணமாய் அமைவதே எழுத்து. அதற்கு இரு வடிவங்கள் உள்ளன.

1. ஒலிவடிவம்:- எழுத்தை ஒலிக்கையில் உண்டாவது.
2. வரிவடிவம். ஒலிக்கும் எழுத்திற்கு அறிகுறியாக ஏட்டிலோ, தாளிலோ எழுது கருவியாற் குறிப்பது.

தமிழிலுள்ள எழுத்துக்களை அவற்றின் ஒலிப்பிறப்பிற்கேற்ப முதலெழுத்து, சார்பெழுத்து என இரு பிரிவுகளாய் வகுப்பர்.

### அ. முதலெழுத்துக்கள்

உயிரு முடம்புமா முப்பது முதலே

(ஷை நூல் - 4)

தமிழ் மொழிக்கு மூலமான ஒலிகள் முப்பது என்பது இலக்கண ஆசிரியர்கள் யாவர்க்கும் ஒப்ப முடிந்தது - இந்த மூல ஒலிகளே முதலெழுத்துக்களாம். இவை இரு பிரிவுகளாய் உள்ளன.

1. முதற் பிரிவு - உயிரெழுத்து.
2. இரண்டாம் பிரிவு - மெய்யெழுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்கு உயிர் போலவும் உடல் போலவும் உள்ளமையால் இவை இப்பெயர்களைப் பெற்றன.

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. அவையாவன:

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

உயிரெழுத்தை ஆவி என்ற பெயராலும் அழைப்பதுண்டு.

மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. அவையாவன:

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

உடம்பு, ஒற்று, புள்ளி, உடல் என்பன மெய்யெழுத்துக்களின் மறுபெயர்கள்.

## மாத்திரை

மாத்திரை என்பது ஒரு முறை கையை நொடிக்கும் பொழுதோ கண்ணை இமைக்கும் பொழுதோ இடைப்படும் கால அளவு. எழுத்துக்களை ஒலிக்கும் கால அளவு மாத்திரை கொண்டு உறுதிசெய்யப்படும்.

(அ) உயிரெழுத்துக்களுக்கான மாத்திரைகள்

i. ஒரு மாத்திரைக்கு உரியவை - அ, இ, உ, எ, ஒ

ii. இரு மாத்திரைகளுக்கு உரியவை- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

ஒரு மாத்திரைப்பொழுதில் ஒலிப்பவை குறில்களென்றோ குற்றெழுத்துக்களென்றோ அழைக்கப்படும், இரு மாத்திரைப் பொழுதில் ஒலிப்பவை நெடில்கள் என்றோ நெட்டெழுத்துக்களென்றோ பெயர் பெறும்.

(ஆ) மெய்யெழுத்துக்களுக்கான மாத்திரைகள்:

மெய்யெழுத்துக்களுக்கான மாத்திரை அரை. இவற்றினிடையே ஒலிக்கும் கால அளவில் வேறுபாடில்லை. ஆனால் ஒலிக்கும் இயல்பில் இவை மூன்று வகையாய் வேறுபடுகின்றன. அவையாவன;

i. வலிய ஓசை உடையவை:- வல்லினம். (வன்கணம், வலி)
க், ச், ட், த், ப், ற்

ii. மெலிய (மென்மையான) ஓசை உடையவை, மெல்லினம்.
ங், ஞ், ண், ந், ம், ன் (மென்கணம், மெலி)

iii. வலியனவுமல்லாமல் மெலியனவுமல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையவை - இடையினம்.
ய், ர், ல், வ், ழ், ள் (இடைக்கணம், இடை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவெழுத்துக்கள்

இடம், ஒலிக்கும் முயற்சி, அளவு, (மாத்திரை), பொருள், வரி வடிவம் ஆகியவற்றால் ஒருவகையில் ஒற்றுமை பூண்டவை இன எழுத்துக்களாம். அ - ஆ, இ - ஈ, உ - ஊ, எ - ஏ, ஐ - இ, ஒ - ஓ, ஔ - உ என்பனவும் க் - ங், ச் - ஞ், ட் - ண், த் - ந், ப் - ம், ற் - ன் என்பனவும் இன எழுத்துக்கள் இடையின மெய்க்கு இனமில்லை. 'ஐ' யுக்கு 'அய்' 'ஔ' வுக்கு 'அவ்' ஒலியமைப்பில் ஓரளவு ஒற்றுமையுடையன எனினும் இவை இனவெழுத்துக்கள் அல்ல.

## ஆ. சார்பெழுத்துக்கள்

உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

(நன்னூல் 5)

முதலெழுத்துக்களைச் சார்ந்து அவை பிறக்குமிடங்களிலே தோன்றி அவற்றினும் மாத்திரை குறைந்தோ கூடியோ அமையும் எழுத்துக்களை நன்னூலார் 'சார்பெழுத்து' எனக் கொண்டு பத்து வகையாக வகுத்துள்ளார் உயிர்மெய், முற்றாய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பன அவை.

(1) உயிர்மெய்:-

உயிர், மெய் ஆகிய இரண்டெழுத்துக்களதும் ஒலிச்சேர்க்கையால் உண்டாகும் புதிய ஒலி வடிவங்களான எழுத்துக்கள் ''உயிர்மெய்யெழுத்துக்கள்'' எனப்படும்.

உ + ம்: க் + அ = க, க் + ஆ = கா, ... க் + ஔ = கௌ, ஆக - 12. இவ்வாறே ங், ச் முதலான ஏனைய மெய்யெழுத்துக்களும் பன்னிரு உயிரெழுத்துக்களதும் ஒலிச்சேர்க்கையால், தனித் தனி பன்னிரண்டு உயிர்மெய்யெழுத்துக்களாய் அமையும்.

ஆக 18 மெய் × 12 உயிர் = 216 உயிர்மெய்

மெய்யெழுத்திற்கு மாத்திரை அரை, உயிர்க்குறிலுக்கு மாத்திரை ஒன்று, நெடிலுக்கு மாத்திரை இரண்டு. அவ்வாறாயின், க + அ = $1\frac{1}{2}$ மாத்திரையாகவும் க் + ஆ = $2\frac{1}{2}$ மாத்திரையாக வுமே கொள்ளப்படல் வேண்டும். ஆனால் க, கா என்பன அ, ஆ போன்று முறையே ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத் * தாம் பெறவேண்டிய மாத்திரையிலும் குறுகிய ஒலிப் பதைச் செவியைக் கருவியாகக் கொண்டு உணரலாம். எனவே உயிர்மெய்யெழுத்துக்களில், ஒரு மாத்திரைபெறுவன க, ங, ச, ஞ முதலானவை; உயிர்க்குறில்கள் போலவே குற்றெழுத்துக்களென வும் இருமாத்திரைகள் பெறுவன (கா, ஙா, சா, ஞா முதலா னவை) உயிர் நெடில்கள் போலவே நெட்டெழுத்துக்கள் எனவும் பெயர் பெறும்.

அக, உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் = 90 (18 × 5)
உயிர்மெய்ந் நெட்டெழுத்துக்கள் = 126 (18 × 7)
மொத்தம் 216

(ii) ஆய்தம் (முற்றாய்தம்)

குற்றெழுத்துக்கும் வல்லின மெய்க்குமிடையே அவற்றைச் சார்ந்து முப்புள்ளி வடிவினதாய் வரும் எழுத்து ஆய்தம் எனப் படும். இவ்வாறு வருகையில் இது தனக்குரிய அரை மாத்திரை யிற் குறுகாது நின்றவாக ஒலிப்பதால் இதனை முற்றாய்தம் என்ற பெயராலும் வழங்குவர்.

க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறு வல்லின மெய்களும் ஆய்தத்தை அடுத்து வரப்பெறும் இடங்கள் ஆறு (எஃகு, கஃசு, அஃது முதலியன), புணர்ச்சி விகாரம் பெறும் இடம் ஒன்று (அவ் + கடிய = அஃகடிய), விரித்தல் என்பதால் மேலதிகமாகப் பெறும் இடம் ஒன்று (செய்வது - செய்வஃது) என முற்றாய்தம் நிற்கும் இடங்களின் எண்ணிக்கை கொண்டு அதன் தொகை எட்டு என்பர்.

(iii) உயிரளபெடை:

உணர்ச்சிகளைத் தாக்கமாக வெளிப்படுத்தும் போதும் இசையிலே இராகம் முதலியவற்றை ஆலாபனை செய்யும் போதும், செய்யுளிலே இசை குறையும் போதும், இசை, குறையாவிடத்தும் இனிய ஓசை வேண்டுமிடத்தும், ஓசை நீட்சி வேண்டும் போதும், பொருட்பேற்றினை அவாவுமிடத்தும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் நெட்டெழுத்துக்கள் தமக்குரிய மாத்திரையிலே நீண்டொலிக்கின்றன.

உ - ம்:- (i) ஐயோஓ — அவல உணர்வு.
(ii) வண்டாடும் சோஓலையிலே — இசைநீட்சி

---

* மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா (தொல்காப் பியம் - எழுத்ததிகாரம், நூன்மரபு 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான்
— செய்யுளில் ஓசை நிரப்புவது.

இவ்வாறு நீண்டொலிப்பதை எழுத்து வடிவிற் காட்ட நீண்ட நெட்டெழுத்தின் இனக்குற்றெழுத்தினை அடையாளமாக இடுவர். சில சந்தர்ப்பங்களிலே குறில் நெடிலாக நீண்டும் அளபெடுக்கும்.

ஆக, உயிர்நெட்டெழுத்து, தனது மாத்திரையில் நீண்டு, நீண்டதற்கு அடையாளமாக இனக்குற்றெழுத்தையும் பெறுமாயின் அது உயிரளபெடை எனப்படும். இது மொழிமுதல், இடை, கடை ஆகிய மூன்றிடங்களிலும் வரும்.

உ-ம்: ஓஒதல் (முதல்), உறாஅர் (இடை), படாஅ (கடை) நெட்டெழுத்தேழும் இவ்வாறு மூன்றிடங்களிலும் அளபெடுப்பதால் உயிரளபெடையின் எண்ணிக்கை இருபத்தொன்றென்பர்.

உயிரளபெடையினைச் சொல்லிசையளபெடை, இன்னிசையளபெடை என இரண்டாக வகுப்பதும் உண்டு.

(க) சொல்லிசையளபெடை:-

செய்யுளில் ஓசை குன்றிய விடத்தும், பொருட்பேறு வேண்டுமிடத்தும் அளபெடுப்பது சொல்லிசையளபெடையாகும்.

உ-ம் (அ) ஓ ஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆ அதல் என்னும் அவர்.

இந்தத் திருக்குறளில் 'ஓதல்' எனச் சீர் அமைந்தாற் செய்யுள் ஓசை குறையும் என்பதால் ஓ என்ற நெட்டெழுத்து அளபெடுத்தது.

உ-ம் (ஆ) உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்

இந்தத் திருக்குறளில் உரனசை (உரன்+நசை) எனச் சீர் அமைந்தாலும் ஓசை பிழைக்காது. ஆனால் நசை என்பது விருப்பம் என்ற பொருளைத் தரும் பெயர்ச்சொல்லாய் நிற்பின் பொருட்பேறு உண்டாகாது; 'விரும்பி' என வினையெச்சமாக மாற்றினால் மட்டுமே பொருட்பேறு உண்டாகும். இதற்காகவே ஐகாரநெடில் நீட்டப்பட்டு அதன் இனமாக இகரம் அடையாளமாக இடப்பட்டது.

(உ) இன்னிசையளபெடை:

செய்யுளில் ஓசை குன்றாதவிடத்தும் இனிய ஓசையைத் தருதற்பொருட்டு அளபெடுப்பதே இன்னிசையளபெடையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம்: கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லா மழை.

இப்பாடலில் எடுப்பதும், கெடுப்பதும் என இருப்பினும் ஓசை குன்றாது. இருப்பினும் இனிய இசையின் பொருட்டு 'உ' ஊ ஆக நீண்டு பின்னர் அளபெடுத்தது.

(iv) ஒற்றளபெடை:

ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஃ ஆகிய பதினோரொற்றுக்களும் (ஃ என்பது ஆய்தம். பெரும்பான்மை கருதி அதுவும் ஒற்றுக்களுள் அடக்கப்பட்டது) மொழியின் இடையிலும் கடையிலும் இரு குற்றெழுத்துக்களைத் தொடர்ந்தோ (குறிலிணை) தனிக்குறிலைத் தொடர்ந்தோ வருகையில் தமது மாத்திரையில் நீண்டொலிப்பதுண்டு. அவ்வாறு நீண்டொலிபபதற்கு அறிகுறியாக அக் குற்றெழுத்துக்களே இடப்படும். ஒற்றெழுத்துக்கள் அளபெடுப்பதால் இவை ஒற்றளபெடைகளாம்.

உ + ம்:- இலங்ங்கு வெஃஃகிறை - குறிலிணைக்கு இடையில் வந்தது
எங்ங்கிறைவன் உளன் - குறிலுக்கு இடையில் வந்தது.
மடங்ங்கலந்த மனனே - குறிலிணைக்குக் கடைசியில் வந்தது.
அங்ங்கனிந்த வருள் - குறிலுக்குக் கடைசியில் வந்தது.

இவ்வாறு பதினோரெழுத்துக்களும் நன்னான்கிடங்களில் அளபெடுக்குமாயின் ஒற்றளபெடைகளின் எண்ணிக்கை நாற்பத்து நான்காதல் வேண்டும். ஆனால் ஆய்தம் (ஃ) கடையில் வராது. எனவே அதற்குரிய ஈரிடங்களைக் கழிக்க ஒற்றளபெடையின் தொகை நாற்பத்திரண்டாகும்.

(vi) குற்றியலிகரம்:-

நிலைமொழியீற்றுக் குற்றியலுகரத்தின் முன்பு வருமொழித் தொடக்கத்தில் யகரம் வருமாயின் குற்றியலுகரம் திரிந்து குற்றியலிகரமாகும். இதனோடு கேள், செல் முதலாகிய வினைகளையடுத்து வரும் 'மியா'வின் தொடக்கத்திலுள்ளதும் குற்றியலிகரமாம். குற்றியலிகரம் - குறுகிய ஓசையியல்பினையுடைய இகரம், (உயிர்க்குறிலாகிய உகரத்தின் மாத்திரை ஒன்று. அது முற்றியலுகரம். அதனோடு ஒப்பிட அரைமாத்திரையளவு குறுகிய உகரம் குற்றியலுகரம். இதுபோன்றே குறிலாகிய இகரத்தோடு ஒப்பிடுகையில் அரைமாத்திரை பெற்றது குற்றியலிகரமாயிற்று. ஆனால் இகரத்தை முற்றியலிகரம் என்னும் வழக்கில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம்: நாடு + யாது = நாடியாது,
வரகு + யாது = வரகியாது
கேள் + மியா = கேண்மியா ('மியா' அசைச்சொல்)

குற்றியலுகரத்தின் தொகை முப்பத்தாறு. (இதன் விபரம் குற்றியலுகரம் என்ற பிரிவிற் காட்டப்படும்.) அந்த முப்பத்தாறும் திரிந்து குற்றியலிகரமாகும் (யகரம் வருமொழித் தொடக்கத்தில் வர) என்பது இலக்கணவாசிரியர் முடிபு எனவே இவ்வகையில் வரும் முப்பத்தாறோடு, மியா என்ற அசைச் சொல்லில் வரும் குற்றியலிகரமும் சேர மொத்தம் முப்பத்தேழு குற்றியலிகரங்கள் என்பது கணக்கு.

(vii) குற்றியலுகரம்:

நெட்டெழுத்து ஏழு, ஆய்தம் ஒன்று, சொல்லுக்கு நடுவிலும் இறுதியிலும் வராத ஔகாரம் தவிர்ந்த உயிர் பதினொன்று, வல்லினமெய் ஆறு, மெல்லினமெய் ஆறு, வகரமெய் (வ்) தவிர்ந்த இடையினமெய் ஐந்து ஆகிய முப்பத்தாறு எழுத்துக் களையும் தொடர்ந்து * சொற்களின் ஈற்றில் வல்லின மெய் யின்மேல் ஊர்ந்து (ஏறி) வரும் உகரம் தனக்குரிய மாத்திரையிற் (ஒரு மாத்திரையில்) குறுகி ஒலிக்கும். அது குற்றியலுகரம் என வழங்கும். எனவே ஈற்றெழுத்தாகிய தனக்கு அயல் எழுத்துக் களாய் வரும் (ஈற்றயல் எழுத்துக்களாக வரும்) முப்பத்தாறு எழுத்துக்களையும் சார்ந்து நிற்கும் நிலை கருதிக் குற்றியலுகரத்தின் தொகை முப்பத்தாறு எனக் கொள்ளப்படும்.

---

* முறைப் பெயராகிய 'நுந்தை' என்பதில் மொழிமுதலெழுத்தாய் வந்துள்ள 'நு' கூடிவரும் உகரம் குற்றிய லுகரம் என்பது தொல்காப்பியர் கருத்து. (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மொழிமரபு 17) நுந்தை - நும் + தந்தை அவ்வாறாயின் மொழிக்கு முதலில் மெய்யெழுத்தோடு கூடி வரும் குற்றியலுகரமும் உண்டு என்பது புலனாகின்றது. உதட்டைக்குவித்து ஒலிக்கும் உகரம் முற்றியலுகரம் என்றும் உதட்டைக் குவியாது ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் என்றும் மற்றொரு கருத்தும் நிலவுகிறது. ஒரே சொல்லை இவ்வாறு இருவகையாகவும் ஒலிக்கையிற் கருத்தும் வேறுபடுமாம் உ-ம்: காது (இதழ்குவித்து உச்சரிக்கையில்) = கொல் - முற்றியலுகரம். காது (இதழ் குவியாது உச்சரிக்கையில்) = செவி – குற்றியலுகரம். (தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், உரைவிளக்கக் குறிப்பு - பிரம்ஸ்ரீ சி. கணேசயர் பக் 39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஏறிவரும் வல்லின மெய்க்கு அயலாக வரும் எழுத்தின் தொடர்ச்சி நோக்கிக் குற்றியலுகரம் ஆறு வகையினவாகப் பிரிக்கப்படும். அவை, நெடிற்றொடர், ஆய்தத் தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் என்பவற்றோடு குற்றியலுகரம் என்ற தொடரையும் ஒவ்வொன்றுடனும் சேர்த்து வழங்கப்படுவனவாம்.

i. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்: நெட்டெழுத்தொன்றினைத் தொடர்ந்து சொல்லிறுதியில் வல்லின மெய்யின் மேலேறி வரும்.

உ-ம் நாடு, ஆடு, ஐது

ii. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்: ஆய்த எழுத்தைத் தொடர்ந்து சொல்லிறுதியில் வல்லின மெய்யில் ஏறிவரும்.

உ-ம்:- எஃகு, கஃசு, அஃது

iii. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்:- தொடர் மொழியின் இடையில் மெய்யோடு கூடிவரும் உயிரைத் தொடர்ந்து சொல்லிறுதியில் வல்லின மெய்யில் ஏறி வரும்.

உ-ம்:- வரகு, பலாசு, குருடு

iv வன்றொடர்க் குற்றியலுகரம்:- வல்லின மெய்யைத் தொடர்ந்து சொல்லிறுதியில் வல்லின மெய்யில் ஏறிவரும்

உ-ம்:- நக்கு, பாக்கு, கச்சு

v. மென்றொடர்க் குற்றியலுகரம்:- மெல்லின மெய்யைத் தொடர்ந்து சொல்லின் இறுதியில் வல்லின மெய்யில் ஏறிவரும்

உ-ம்:- சங்கு, பந்து, கன்று

vi. இடைத்தொடர்க் குற்றியலுகரம்:- இடையின மெய்யைத் தொடர்ந்து சொல்லின் இறுதியில் வல்லின மெய்யில் ஏறிவரும்.

உ-ம்: செய்து, மார்பு, சால்பு

ஆறுவகைத் தொடர்க் குற்றியலுகரங்களுக்கும் அவை ஏறிவரும் ஆறு வல்லின மெய்களையும் கொண்டு சொற்கள் அமையும் பொழுதும் முப்பத்தாறு குற்றியலுகரங்கள் வரும். அவ்வகையிலும் அவற்றின் தொகை முப்பத்தாறெனலாம்

vii. 'ஐ'காரக்குறுக்கம்

'ஐ' என்ற எழுத்தினைத் தனித்து ஒலிக்கும் பொழுதும் அஃது அளபெடுக்கும் பொழுதும் அதற்குரிய மாத்திரை முறையே இரண்டு, மூன்று அல்லது நான்கு. ஆனால் சொல்லின் தொடக்

கத்திலோ, இடையிலோ, கடையிலோ வருகையில் அதன் இயல்பான இரண்டு மாத்திரை * ஒன்றரையாகக் குறையும். (ஐ - அய் என ஒலிக்கும்) இவ்வாறு குறைந்து - குறுகி ஒலிப்பதை 'ஐகாரக்குறுக்கம்' என்பர்.

உ - ம்: ஐயர், மடையன், தவளை.

முதல், இடை, கடை மூன்றிடங்களிலும் வருவதால் ஐகாரக் குறுக்கத்தின் தொகை மூன்று.

(viii) ஔகாரக்குறுக்கம்

ஐகாரம் போலவே 'ஔ' காரமும் தன்னைத் தனித்து ஒலிக்கும் போதும், அளபெடுக்கும் போதும் பெறுகின்ற மாத்திரையளவைச் சொல்லில் அமைத்து ஒலிக்கையிலே பெறுவதில்லை. மாத்திரையிற் குறுகுவதே இயல்பு. ஔகாரம், ஐகாரம் போன்று மொழி இடையிலோ கடையிலோ வராமையால் அதற்குரிய இடம் ஒன்றே. எனவே ஔகாரக்குறுக்கமும் ஒன்றே.

உ - ம்: ஔவை (அவ்வை)

(ix) மகரக்குறுக்கம்

ணகரம் னகரம் ஆகிய மெய்களின் பின்னும் வகர உயிர்மெய்யின் முன்னும் வரும் மகரம் தனது மாத்திரையிற் குறுகும். அவ்வாறு குறுகும் மகரம் மகரக்குறுக்கம் எனப் பெயர்பெறும். இதன் மாத்திரை கால் ($\frac{1}{4}$)

உ - ம்: கேளும் - கேண்ம்
போலும் - போன்ம்
வரும் + வளவன் - வரும் வளவன்.

செய்யுளிலே விகாரப்பட்டு வரும் மகரக்குறுக்கத்தின் தொகை இரண்டு வழக்கில் வருவது ஒன்று. ஆக மொத்தம் மூன்று.

(x) ஆய்தக்குறுக்கம்

நிலைமொழி ஈற்றில் லகரமோ ளகரமோ வந்து வருமொழித் தொடக்கத்தில் தகரம் வருமாயின் லகரமும் ளகரமும் கெட்டு அவ்விடத்தில் ஆய்தம் தனது மாத்திரையிலே குறுகி நின்று ஒலிக்கும். அவ்வாறு நிற்கும் ஆய்தம் ஆய்தக்குறுக்கம் எனப் பெயர்பெறும். இதன் மாத்திரை கால் ($\frac{1}{4}$).

---

* ஐகார ஔகாரக் குறுக்கங்களுக்கு மாத்திரை ஒன்று என்பாரும் உளர்.

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ - ம்: கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது

ல், ள், ஆகிய இரண்டிற்கும் மாற்றீடாக இடம்பெறும் ஆய்தக்குறுக்கம் இரண்டு

## சார்பெழுத்துக்கள் பற்றிய கருத்து முரண்பாடுகள்

சார்பெழுத்துக்களைப் பத்தாக வகுத்து அவற்றின் தொகை 369 என்று நன்னூல் ஆசிரியராகிய பவணந்தி முனிவர் உரைத்தார். (இந்த விபரம் அவ்வச் சார்பெழுத்துக்களின் வகையையும் தொகையையும சேர்த்து நோக்க வெளியாகும்) பவணந்தியாருக்குப் பின் வந்த இலக்கண ஆசிரியர்கள் பலரும் சார்பெழுத்துக்களின் தொகை, வகை பற்றி வெவ்வேறு கருத்துடையர். ஆனால் தொல்காப்பியர் 'சார்ந்து வரும் மரபின' வாக மூன்று எழுத்துக்களையே குறித்துள்ளார் அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவாகும். (தொல்காப்பியம், எழுத்ததிகாரம்: நூன்மரபு 1, 2)

'தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி' எழுதிய சிவஞான முனிவரும் இன்றைய மொழியியலார் பலரும் தொல்காப்பியர் பகுத்துள்ள மூன்றுமே ஏற்புடையது எனப் பல சான்றுகள் காட்டி நிறுவுவர்.

அச்சான்றுகளின் மிகச் சுருக்கமான விளக்கம் வருமாறு:

(அ) முதலெழுத்துக்களாகிய உயிரோ மெய்யோ குறுகுவதாலோ நீள்வதாலோ சார்பெழுத்துக்கள் ஆவதில்லை. இவ்வுண்மையை அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள உயிரளபெடை ஒற்றளபெடை, ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் முதலிய பெயர்களாலேயே உணர்ந்து கொள்ளலாம். இவை போலவன்றிக் குறுகிய இயல்புடைய இகரம் (குற்றியலிகர ), குறுகிய இயல்புடைய உகரம் (குற்றியலுகரம்), ஆய்தம் என்று சார்பெழுத்துக்களின் சிறப்பியல்பு புலப்பட அவற்றிற்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கியுள்ளதை ஒப்பு நோக்குக.

(ஆ) குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பன தத்தமக்கென ஒலிக்கும் மாத்திரையளவு கொண்டவை (½). அவை வேறு எழுத்துக்களின் குறுகிய வடிவங்கள் அல்ல. 'ஆய்தக்குறுக்கம் என்று ஒன்றில்லை' என்பர்.

(இ) இவை மூன்றும் தமக்கென வரிவடிவம் பெற்றிருந்தமையும் தொல்காப்பியத்தின் மூலம் அறிய வரும் செய்தியாகும் (தொல்காப்பியம், எழுத்ததிகாரம்: மொழிமரபு 1, புணரியல் 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னூலார் உரைத்த சார்பெழுத்துக்களில் உயிர்மெய் தவிர்ந்த மற்றவற்றிற்கு வரிவடிவம் இல்லை (உயிர்மெய், உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கும் கூட்டெழுத்து அது சார்பெழுத்தன்று.)

(ஈ) மொழி முதலிலே குற்றெழுத்தும் இறுதியில் வல்லின மெய்யோடு கூடிய உயிரோ (பஃறி) குற்றியலுகரமோ (அஃது) வர இடையில் மட்டுமே ஆய்தம் வருகிறது. தன்னைத் தொடரும் வல்லெழுத்தை உரசெழுத்தாக்கும் இயல்பும் அதற்கு உண்டு. (அது, அஃது என்ற இரு சொற்களையும் ஒலிக்கையில் 'த்' இன் ஒலிப்பில் வேறுபாட்டை உணரலாம்)

(உ) பிற எழுத்துக்களைச் சார்ந்து குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே வரும் இயல்பு குற்றியலுகரத்துக்கு உண்டு. இதனை மொழியியலார் ஒலித்துணை என்பர்.

(ஊ) வேண்டியா, வரகியாது என்று ஈரிடங்களிலும் யகரத்தின் சார்பால் குற்றியலிகரம் ஒலித்துணையாக வருகிறது. இவ்வாறு குறிப்பிட்ட சில நியமங்களுக்குட்பட்டுத் தமக்கென அமைந்த இயல்பு (சார்தல்) கொண்டவையாய் விளங்குவதால் 'சார்பெழுத்து' என்ற வரைவிலக்கணத்திற்கு முற்றும் பொருந்துவன இம்மூன்றுமே எனலாம்.

## சுட்டெழுத்துக்கள்

பொருள்களைச் சுட்டி அறிய உதவும் அ, இ, உ என்ற மூன்றெழுத்துக்களும் சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

(i) அகச்சுட்டு: சொல்லின் அகத்துறுப்பாய்ச் சுட்டெழுத்து அமைந்து சுட்டப்படும் பொருள் இது என வெளிப்படுத்தாது வருவது.

உ-ம்: அவன், இவன், உவன்
அவள், இவள், உவள்
அவர்கள், இவர்கள், உவர்கள்
அது, இது உது
அவை, இவை, உவை

(ii) புறச்சுட்டு:- சொல்லின் புறத்துறுப்பாய்ச் சுட்டெழுத்து அமைந்து சுட்டப்படும் பொருள் இது என வருவது.

அக்குதிரை, இக்குதிரை, உக்குதிரை
அக்குதிரைகள், இக்குதிரைகள், உக்குதிரைகள்

'அவ்' இவ், உவ் என்பன பன்மைச் சுட்டாகப் பயன்படுதலும் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலியெழுத்துக்கள்

ஒரு சொல்லிலே வரும் ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு எழுத்து வருமாயின் பின்னைய எழுத்துப் போலியெழுத்தாகும். (போலி - போல்வது) இப்போலியெழுத்து மொழியிறுதியிலும் இடையிலும் கடைசியிலும் வரும்.

(i) மொழியிறுதிப்போலி:- ம் - ன், ல் - ர்,

உ - ம்:- அறம் - அறன், மரம் - மரன்.

சாம்பல் - சாம்பர், பந்தல் - பந்தர்.

(ii) மொழியிடைப்போலி: - ர-ரை, ல - லை, த - ச

உ-ம்: அரசு - அரைசு

இலஞ்சி - இலைஞ்சி

பித்தன் - பிச்சன்

(iii) மொழிமுதற்போலி:- ப - பை, ம - மை, ந - ஞெ,

ஞா - நா, நே - ஞே

உ-ம்: பயல் - பையல்

மயல் - மையல், நண்டு - ஞெண்டு

ஞாயிறு - நாயிறு

நேயம் - ஞேயம்.

கைத்தல் - கைச்சல், வைத்த - வைச்ச, வியம் - வியளம், முதலாகப் பேச்சுவழக்கிலும் போலியெழுத்துக்கள் பயன்படக் காண்கின்றோம் ஐ = அ இ என்றோ, அய் என்றோ, ஔ = அஉ என்றோ அவ் என்றோ கொள்வதோ அவற்றின்வழி அய்யர். அவ்வை என்று முறையே ஐயர், ஔவை என்பவற்றிற்கு மாற்றீடாகக் கொள்வதோ தவறில்லை இவற்றையும் போலியுள் அடக்குவதுண்டு. வடமொழியிலக்கண மரபிற்கமையச் சந்தியக்கரம் என்ற பெயரால் இவை வழங்கப்படுவதும் உண்டு (சந்தி - புணர்ச்சி, அக்கரம் - எழுத்து)

## எழுத்துக்களின் சாரியைகள்

மொழியினை (சொல்லை) எளியதாகவும் இனிமையாகவும் ஒலிக்கவும் (பழம் + ஐ = பழம் - அத்து + ஐ = பழத்தை) மிகச் சிலவாகிய சந்தர்ப்பங்களிலே பொருட்பேற்றினை ஏற்படுத்தவும் (புளி + பழம் = புளி + அம் + பழம் = புளியம்பழம்) வழங்கும் மொழி சாரியைகள் போல, எழுத்துக்களை வேறுபடுத்தி ஒலிக்க எழுத்துச் சாரியைகள் பயனாகின்றன. அவை வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) தனி மெய்யெழுத்துக்களின் சாரியை - கரம்
உ + ம்:- க், ங்... = ககரம், ஙகரம்

(ii) உயிர்க்குற்றெழுத்துக்கள் — கரம்
உ + ம்:- அ, இ... = அகரம், இகரம்

(iii) உயிர் நெடில்கள் ஐ. ஔ உட்பட) — காரம்
உ + ம்: ஆ, ஈ, ஔ - ஆகாரம், ஈகாரம், ஔகாரம்

(iv) உயிர் நெடில்களில் ஐ, ஔ - கான்
உ + ம்:- ஐகான், ஔகான்

(v) உயிர்க்குறிலும், உயிர்மெய்க்குறிலும் - காரம், கான், கரம்.
ம - (உயிர்மெய்) - மகாரம், மஃகான், மகரம்.
அ - (உயிர்) - அகாரம், அஃகாரம், அஃகான், அகரம்

ஆய்தவெழுத்தாகிய ஃ, கேனம் என்னும் சாரியையும் தொடக்கத்தில் அகரமும் பெற்று 'அஃகேனம்' என்று ஒலிக்கப் படும். இக்காலத்தில் 'ஆனா, ஆவன்னா, கானா, காவன்னா', என்றவாறு அரிச்சுவடி கற்கும் பாலகருக்குச் சொல்லிக்கொடுப்பர். இவ்வழக்கும் இன்று அருகி எழுத்துக்களைச் 'சாரியை' வழங் காது ஒலிப்பதே பெருவழக்காயுள்ளது. இலக்கணம் கற்போர் மேற்குறித்த எழுத்துச் சாரியைகளை இலக்கண நூற்பாக்களிலும் இலக்கண பாடங்களிலும் மட்டுமே கையாள்கின்றனர்.

## எழுத்துக்கள் சொற்களில் அமையும்போது நிகழும் ஒலிநுட்ப வேறுபாடுகள்

ஒரே எழுத்து சொல்லில் அமைகையில் நுட்பமான ஒலி வேறுபாட்டினை அடையும் வாய்ப்புக்கள் உள்ளன மொழியிய லார் இவற்றை 'மாற்றொலி' என வழங்குவர்.

உதாரணமாகக் காகம் என்ற சொல்லை நோக்கினால் அதன் முதல் எழுத்தான 'கா' 'K' என்ற ஆங்கில எழுத்தின் ஒலிப் பினைப் பெறுகிறது. நடுவிலுள்ள 'க' 'H' என்ற ஆங்கில எழுத் தின் ஒலிப்பினை அடைகிறது.

மொழியியல் என்ற தமது நூலிலே கலாநிதி ரா சீனிவாசன் இவ்வாறமையும் மாற்றொலிகளுக்கு ஓர் அட்டவணை தந்துள் ளார் அது வருமாறு:

ப (p) = / p /, / b /
ச (c) = / ஸ /, / ச /, / ஜ /.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே தமிழிலில்லாத ஆங்கிலச் சிறப்பொலி எழுத்துக்கு மாற்றாகத் தமிழெழுத்தினைக் கையாள அறிஞர்கள் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். அவையாவன:

F — 1. ஃப — ஃபரன்ஹைற்
2. (f) ப — (f) பாஷன்.

## எழுத்தின் வரிவடிவ மாற்றம்

எழுத்தினது ஒலி வடிவிலே மாற்றம் நிகழ்வது அரிது ஆனால் வரிவடிவமோ காலத்துக்குக் காலம் மாற்றம் அடைந்து வந்துள்ளமைக்கு அவ்வக்காலக் கல்வெட்டுக்களை அறிஞர்கள் சான்றுகளாய்க் காட்டுகிறார்கள். தொல்காப்பியத்திற்கு உரையெழுதியவர்களுள் ஒருவரான நச்சினார்க்கினியர், 'தொல்காப்பியர் இன்ன எழுத்திற்கு இன்ன வடிவெனப் பிறர்க்கு உணர்த்துதற்கு அரிதென்பது கருதி எழுத்துக்களின் உருவிற்கு வடிவு கூறவில்லை என்பர்; எனினும் சில எழுத்துக்களுக்கு வடிவுகூறினார் என்றும் எடுத்துக் காட்டுவர். 'உயிரெழுத்துக்கு வடிவின்மையின் அவற்றின் வடிவைத் தரவில்லை' என்பவர், 'எகரம் ஒகரம் தமக்கு மேற் புள்ளி பெறும்' என்று தொல்காப்பியர் கூறினார்' என்பர். தொல்காப்பியர் தம் காலத்திலும் முன்பும் மாற்றம் இன்றிப் பயின்று வந்த எழுத்துக்களின் வடிவத்தை விடுத்துத் தங்காலத்திலோ சற்று முன்னரோ மாற்றமடைந்த எழுத்து வடிவங்களை மட்டும் எடுத்துக்காட்டியிருக்கலாம். தொல்காப்பியர் குறித்த எழுத்துக்களின் வரிவடிவங்கள் பின்வருவன:

(அ) மெய்யெழுத்துக்கள் மேற்புள்ளி பெறும் (க், ங், ச்...) அவை போலவே எ, ஒ என்பனவும் மேற்புள்ளி பெறும்.
(எ, ஒ) அவ்வாறாயின் இன்றுள்ள ஏ, ஓ என்பன அக்காலத்தில் எ, ஒ எனவே விளங்கின.

(ஆ) மகரம் (ம) |_| வடிவில் அமைந்தது; மெய்யாயின் |.| (ம்) என்ற வடிவிலும் உயிர்மெய்யாயின் (ம) |.| வடிவிலும் வேறுபாடு காட்டப்பட்டது.

உதாரணம்: மம்மர் = |_| |_| |.| ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஆய்தம் அடுப்புப் போல முப்பாற்புள்ளி (ஃ) பெறும்
(ஈ) குற்றியலுகரம் - பட்டு. ஈற்றிற் புள்ளி பெறும்.
(உ) குற்றியலிகரமும் அவ்வாறே நிற்றல் வேண்டும் - கேண்மியா இன்று எ. ஒ மேற்புள்ளி பெறுவதில்லை. ஏ, ஓ கீழ்க்கோடும் சுழியும் பெற்று மாற்றமடைந்துள்ளன. (நன்னூலாரும் எ, ஒ மேற்புள்ளிபெறும் என்பர். வீரமாமுனிவரே எ, ஒ விற்கு மேற் புள்ளி நீக்கி ஏ, ஓ விற்குக் கீழ்க்கோடும் சுழியும் வழங்கினார் என்பர்.

சில ஆண்டுகளுக்கு முன் தமிழகத்திலும் அதனைப் பின் பற்றி நம் நாட்டிலும் பதின்மூன்று எழுத்துக்கள் முன்னைய வடிவினின்று மாற்றப்பட்டுள்ளன. அவை பின்வருவன.

ணா (ண), ணை (ணை)' ணொ (ணொ), ணோ (ணோ) லை (லை), ளை (ளை), றா (றா), றொ (றொ), றோ (றோ) னா (னா), னை (னை), னொ (னொ), னோ (னோ).

## 2. பிறப்பியல்

எழுத்துக்கு இருவடிவங்கள் உள்ளன என்று எழுத்தியலின் தொடக்கத்திற் கண்டோம். அவ்விரண்டினுள் * ஒலிவடிவமே முதலும் முதன்மையும் கொண்டதாகும். எழுத்தொலி பிறக்கும் வகையினைத் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்கள் விரிவாக விளக்கியுள்ளன. தொல்காப்பியர் பிறப்பியலில் கூறும் இலக்கணம் இன்றைய மொழிநூலாரால் பெரிதும் போற்றப்படுகின்றது. "அவர் கூறுவனவற்றிற் பெரும்பாலன இன்றைய மொழிநூலாருக்கு உடன்பாடாகக் காணப்படுகின்றன" என்பர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை (தமிழ் வரலாற்றிலக்கணம், பக். 73) இங்குத் தொல்காப்பியம் கூறும் எழுத்துக்களது பிறப்புப் பற்றிய கருத்துக்களைத் தொகுத்து நோக்குவோம்.

### எழுத்துக்கள் தோன்றும் வகை

வயிற்றிலிருந்து பிறக்கும் காற்று நெஞ்சிலும் குரல்வளையிலும் தலையிலும் பொருந்திக் குரல்வளையூடாக வாயினுள்ளே செல்லும். அதுவே மூக்கினூடாகவும் வெளிப்படும். நாவும் மேல்வாயும் (அண்ணமும்) பல்லும் உதடும் பொருந்துவதால் இக்காற்றொலி எழுத்தாகப் பிறக்கின்றது.

---

* "......இதனை (எழுத்தை) 'எழுது' என்ற பொருளிலும் 'ஒலியெழுப்பு' என்ற பொருளிலும் (தொல்காப்பியர்) பயன்படுத்துகிறார்". தமிழ்மொழி வரலாறு - சு. சக்திவேல் (பக்கம். 89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (i) உயிரெழுத்துக்களின் பிறப்பு

உயிர் பன்னிரண்டும் குரல்வளையிலே தோன்றும் காற்றினால் உண்டாகின்றன.

இவற்றுள் அ, ஆ என்ற இரண்டும் வாயைத் திறப்பதனால் ஒலிக்கும்.

இ, ஈ, எ, ஏ, ஐ என்ற ஐந்தும் வாயைத் திறப்பதோடு மேல்வாய்ப் பல்லோடு அடிநா விளிம்பு உறுவதனாலே பிறக்கும்.

உ, ஊ, ஒ, ஓ, ஔ என்ற ஐந்தும் உதட்டினைக் குவித்து ஒலிப்பதனாலே பிறக்கும்.

## (ii) மெய்யெழுத்துக்களின் பிறப்பு

க, ங என்ற இரண்டும் நாவின் அடிப்பகுதியும் மேல் வாயின் அடிப்பகுதியும் சேரப் பிறக்கும்.

ச, ஞ என்ற இரண்டுக்கும் நாவின் இடைப்பகுதியும் மேல் வாயின் இடைப்பகுதியும் சேரப் பிறக்கும்.

ட, ண என்ற இரண்டும் நாவின் நுனியும் மேல்வாய் முற் பகுதியும் கூடப் பிறக்கும்.

த, ந என்பன நா நுனி விரிந்து மேல்வாயின் அடிப்பகுதியை வருட உண்டாகும்.

ற, ன ஆகியவை நாநுனி மேல் நோக்கிச் சென்று மேல் வாயைத் தொடும் முயற்சியாலே தோன்றும்.

ர, ழ என்பன நாநுனி மேல் நோக்கிச் சென்று மேல் வாயைத் தடவுவதாலே பிறக்கும்

லவும் ளவும் முறையே மேல்வாய்ப் பல்லினது அடியைப் பொருந்தி ஒற்றுவதாலும், தடவுவதாலும் தோன்றும்.

ப, ம ஆகிய இரண்டும் உதடுகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துவதாலே தோன்றும்.

வ, மேற்பல்லும் கீழுதடும் பொருந்தத் தோன்றும்.

ய, குரல்வளையில் உண்டாகும் காற்று மேல் வாயைப் பொருந்த உண்டாகும்.

வல்லினமாகிய க, ச, ட, த, ப, ற என்பவற்றிற்கு முறையே ங, ஞ, ண, ந, ம, ன இன எழுத்துக்களாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மெல்லின எழுத்துக்கள் மூக்கினூடு தோன்றும் காற்றினாலேயே உறுதி பெறத் தோன்றுகின்றன.

இவ்வொலிப்பு முறையினை அறிந்து கொள்வது எழுத்துக்களைப் பிழையின்றி ஒலிப்பதற்கு உதவியாகும்.

## 3. சொல்லியல்

'சொல்' என்பதனைப் 'பதம்' என்ற வடசொல்லாற் குறிக்கும் நன்னூலார், ஓர் எழுத்தாலாவது ஒன்றற்கு மேற்பட்ட எழுத்துக்களாலாவது ஆகிப் பொருள் தருவது அதற்கு வரைவிலக்கணம் என்பர். "சொல் என்று சொல்லப்படுவன பெயர்ச்சொல், வினைச்சொல் என்னும் இருவகையின என்பர் ஆசிரியர்" எனக்கூறும் தொல்காப்பியர், அடுத்து வரும் சூத்திரத்திலே "இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர், வினைகளைச் சார்ந்த இடத்திலே தோன்றும் என்பர்" எனவும் உரைப்பர். (தொல். சொல். பெயரியல். 4, 5) எனவே பொருளைப் புலப்படுத்துவதிலே முதன்மையான சொற்கள் பெயரும் வினையும் என்பதும் இடை, உரி என்பன அவற்றைச் சார்ந்து நின்று பொருள் புலப்படுத்துவதால் இரண்டாம் நிலைக்கு உரியன என்பதும் புலனாகின்றன எனினும் பின்னைய இரண்டும் பொருள் விரிவாக்கத்திற்கு இன்றியமையாதனவே என்பதை,

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே
(தொல். சொல். பெயரியல் 1)

என்ற சூத்திரம் தெளிவுபடுத்துகின்றது

பெயர், வினை, இடை, உரியாகிய நான்கையும் உள்ளடக்கித் தமிழிலே இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நால்வகைச் சொற்களும் பயின்று வருகின்றன. இவையாவும் பற்றிச் 'சொல்லியல்' என்ற இந்தப் பிரிவிலே விளக்கம் தரப்படும்.

### பெயர்ச்சொல்

இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.
(நன்னூல், சொல்லதிகாரம், பெயரியல் 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேயுள்ள சூத்திரத்தின்படி பெயர்ச்சொல்லிற்குரிய இயல்புகள் பின்வருவன:

(i) பெயர் காரணமின்றி இடப்பட்டதாகவோ, காரணங் கருதி வழங்கிவருவதாகவோ இருக்கலாம்.

(ii) இவ்விருவகைப் பெயர்களும் மரபுவழி வருவனவாகவோ புதியனவாக ஆக்கப்படுவனவாகவோ அமையலாம்.

(iii) வினையாலணையும் பெயர்கள் (தொழில்) அல்லாதன காலங்காட்டா. (தொல்காப்பியரும் இதே கருத்துடையர்) (தொல் சொல், வேற்றுமையியல் 71)

(iv) எட்டு வேற்றுமைகளும் தம்மைச் சார்வதற்கு இடமளிக்கும்.

(v) இருதிணை, ஐம்பால் மூவிடத்திலும் தமக்குரியவற்றைச் சிறப்பாக ஏற்கும் பெயர்களும் உள.

(vi) இருதிணை, ஐம்பால், மூவிடங்களில் ஒன்றற்கோ பலவிற்கோ பொதுவாக வரும் பெயர்களும் உள.

(i) (அ) இடுகுறிப்பெயர்:- தமிழ்மொழியின் தொடக்க காலத்திலே பொருள்களுக்குப் பெரும்பாலும் இடுகுறியாக (அடையாளமாக)ப் பெயர்கள் வழங்கப்பட்டிருக்கலாம். காலப் போக்கில் இடுகுறிகளுக்குக் காரணங்கள் கற்பிக்கப்பட்டு அக் காரணங்களிலே பலவும் மறக்கப்பட்டிருக்கலாம். இலக்கண ஆசிரியர்கள் தங்காலத்திலே காரணம் தெரியப்பட்டு வழங்கிய பெயர்களைக் காரணப் பெயர்களென்றும் காரணம் மறக்கப்பட்டு இடுகுறியளவில் நின்ற பெயர்களை இடுகுறிப் பெயர்களென்றும் வகைப்படுத்தினர்.

இவ்வகையில் இடுகுறிப்பெயராவது காரணம் கருதாது பொருளுக்கு இட்டு வழங்கும் பெயராகும். இது ஒரு சாதியிலுள்ள முழுப்பெயர்களையும் குறிக்கையில் 'இடுகுறிப் பொதுப்பெயர்' எனவும் தனிப்பொருளையோ அதன் வகுப்பையோ குறிக்கையில் 'இடுகுறிச் சிறப்புப்பெயர்' எனவும் வழங்கும்.

உ + ம்: (i) இடுகுறிப் பொதுப்பெயர்.

மரம், நிலம், செடி, புள்.

(ii) இடுகுறிச் சிறப்புப்பெயர்

வேம்பு, மலை, மல்லிகை, கோழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) காரணப்பெயர்; இடுகுறியாய் வழங்கிப் பின்பு காரணம் கற்பிக்கப்பட்ட பெயர்கள். இவையும் முன்னைய போலவே காரணப்பொதுப்பெயர். காரணச்சிறப்புப்பெயர் என இரு வகைப்படும்.

(i) காரணப் பொதுப்பெயர்

உ-ம்: பறவை (பறக்கும் தொழிலால் வந்த பெயர்).
அணி (அணியப்படுவதால் வந்த பெயர்).

(ii) காரணச் சிறப்புப்பெயர்

உ-ம்: காகம் (காகா என்று கரைவதால் வந்த பெயர்).
வளை, சிலம்பு (வளைந்திருக்கும் அணி, 'சில்' என்று ஒலிக்கும் அணி).

இவை மட்டுமன்றிக் காரணம் கருதும் பொழுது அக்காரணத்திற்குரிய பலபொருள்களுக்கும் பெயராகக்கூடிய தொன்றாயினும் அக்காரணத்தையுடைய ஒன்றற்கே சிறப்பாக (இடுகுறியாக) வழங்கும் பெயர் காரண இடுகுறிப்பெயராகும்.

காரண இடுகுறிப் பெயர்

(i) உ-ம்: முக்கண்ணன் – விநாயகர் முதலிய வேறு கடவுளர்க்கும் முக்கண்கள் உள்ளனவாயினும் சிவபெருமானையே முக்கண்ணன் என்ற காரணப்பெயர் சிறப்பாகக் குறிக்கும்.

(ii) முள்ளி:- முள்ளுடைய செடிகள் யாவற்றுக்கும் வழங்கப்படாது குறித்த ஒரு செடிக்கே 'முள்ளி' என்ற பெயர் சிறப்பாக (இடுகுறியாக) அமையும்.

(i) (அ) இடுகுறி மரபுப்பெயர்:- இத்தகைய இடுகுறிப் பெயர்கள் மரபுவழியாக வழங்கிவரின் அவை இடுகுறிமரபுப் பெயர் எனக் கொள்ளப்படும்.

உ-ம்: மரம், வேம்பு, பனை.

காரண மரபுப்பெயர்:- மரபுவழி வழங்கும் காரணப்பெயர்கள் இதனுள் அடங்கும்.

உ-ம்: பறவை, சிலம்பு, கூடு.

(ஆ) இடுகுறி ஆக்கப்பெயர்:- இடுகுறியாகப் புத்தாக்கம் செய்யப்படும் பெயர்கள் இதனுள் அடங்கும் ஆனால் இவ்வாறு இடுகுறியாகப் பெயர்களைப் படைப்பது அரிதென்றும், கடவுளர் பெயரை மக்களுக்கு இடுவதை இடுகுறியாக்கத்தின் பாற்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலாம் என்றும் உரையாசிரியர் குறிப்பர். பொருளை நோக்காது பயன்படுத்தப்படும் பொருளுக்கு அறிகுறியாக நாம் வழங்கி வரும் திசைச்சொற்கள் பலவற்றையும் இடுகுறி ஆக்கத்துள் அடக்கலாம்.

உ-ம் :- ரேடியோ, பஸ், ஒட்சிசன்

(ii) காரணவாக்கப் பெயர்:- காரணங்கருதிப் புதியவையாக ஆக்கப்படும் பெயர்கள் இதனுள் அடங்கும்.

உ+ம்: கூர்ப்பு Evolou ion), முலையூட்டி, ஏவுகணை,

(iii) வினையாலணையும் பெயர்களல்லாத பெயர்கள் காலங் காட்டமாட்டா

உ+ம்: நடந்தவன் - தெரிநிலை வினை வினையாலணையும் பெயர்.
சரியான் - குறிப்புவினை வினைவினையாலணையும் பெயர்

(இவைபற்றிய விளக்கம் 'வினைச்சொல்' பற்றிய பகுதியிலே தரப்படும்.)

வினையாலணையும் பெயர் மட்டுமன்றிச் சில தொழிற் பெயர்களும் காலங் காட்டுவதுண்டு.

உ - ம்: வந்தமை, வருவது (விளக்கம் 'காலம் காட்டும் தொழிற்பெயர்கள்' என்ற பகுதியிலே தரப்படும்.)

('தொழிலல காலம் காட்டா' என்றது பெரும்பான்மை கருதியே. பெயர்களில் ஒன்றாகிய தொழிற்பெயர் சிறுபான்மை காலம் காட்டுவதாலே பெயருக்குத் தரப்பட்ட விதி வழுவானது என்று கொள்ள வேண்டியதில்லை. (பெரும்பான்மை தென்னைகள் நிற்குமிடத்தைத் 'தென்னந்தோப்பு' என்பதால் அங்கு வேறு மரங்கள் இல்லை என்பது பொருளன்று )

(iv) எட்டு வேற்றுமைகளையும் பெயர்கள் தம்மைச் சார்வதற்கு இடம் அளிக்கும் (இதன் விளக்கத்தினை வேற்றுமை என்ற பகுதியிலே காண்க.)

(v) பெயர்கள் திணை, பால், எண், இடம் ஏற்றல்.

(அ) திணை: 'திணை' என்பதற்கு நிலம், இடம், சாதி ஒழுககம், குடி, குலம், ஒழுக்கம், பொருள் எனப் பல பொருள்கள் உள்ளன. சொல்விலக்கணத்தைப் பொறுத்த பரையிலே சாதி என்பதே அதற்குப் பொருத்தமான பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகும். பொருள்களை அவற்றின் உயர்வு கருதி உயர்திணை யாகவும் (உயர்சாதியாகவும்) உயர்வின்மை கருதி அஃறிணை யாகவும் (உயர்வல்லாத சாதி) பிரிப்பர். அஃறிணை = அல் லாத) திணை.

> உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை என்மனார் அவரல பிறவே
> ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே
>
> (தொல், சொல், கிளவியாக்கம் 1)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி உயர்திணையில் மக்கள் அடக்கப்பட்டனர் அஃறிணையில் மக்களல்லாத பிற எல்லாம் அடக்கப்பட்டன. நன்னூலார் மக்கள், தேவர், நரகர் என்ற மூவகைச் சாதியாரை உயர்திணையுள் அடக்கினார். (தேவர் - விண்ணுலகில் வாழ்வோர் நரகர் - கீழுலகில் (பாதலத்தில் வாழ்வோர்) இவ்விரு சாதியாரும் ' வடஇந்திய இலக்கியங்களில் மக்களின் நிழல் போலச் சித்திரிக்கப்பட்ட கற்பனைப் பாத்தி ரங்கள்'' (தமிழ் வரலாற்றிலக்கணம் - டாக்டர் ஆ வேலுப்பிள்ளை.

(ஆ) பால்.

பால் என்பது பகுதி எனப் பொருள்படும். உயர்திணையா னது ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பகுதி களாகவும் அஃறிணையானது ஒன்றன்பால், பலவின்பால் என இரு பகுதிகளாகவும் பாகுபடுத்தப்படும் (அஃறிணையில் உயி ருள்ள பொருள்கள் பலவிற்கும் ஆண், பெண் என்ற பாகுபாடுகள் உள்ளன. எனினும் அவற்றை ஒன்று ஒன்றன்பால்), பல (பலவின்பால்) என இருபகுப்பினுள்ளும் வகுப்பதே தமிழிலக்கண ஆசிரியர்களின் மரபு. காரணம் அஃறிணைப் பொருள்களிற் சில ஆண், பெண் பகுப்புக்குள் அடங்காமையே.

(i) ஆண்பால்: மக்கள், தேவர், நரகர் என்பவருள் ஆணைக் குறித்து நிற்கும்.
உ — ம்: மகன், தேவன், நரகன்.

(ii) பெண்பால்: மேற்குறிப்பிட்டோருள்ளே பெண்களைக் குறிக்கும்.
உ — ம்: மகள், தேவி — (நரகனுக்குப் பெண்பாற் சொல் தமிழில் இல்லை.)

(iii) பலர்பால்: உ — ம்: மக்கள், தேவியர், நரகர்.

(iv) ஒன்றன்பால்: உ — ம்: சிங்கம், மரம், வீடு.

(v) பலவின்பால்: உ — ம்: சிங்கங்கள், மரங்கள், வீடுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தன்மை, விகுதியான 'அல்' மிகப்பழமையானது அஃது அக்காலச் செய்யுள்களிலே பெருவழக்காயிருந்தது. இன்று வழக்கிழந்துவிட்டது.

3. என், கு, டு, து, று, எம், ஏம், கும், டும், தும் றும் ஆகிய தெ. வி. மு. தன்மை விகுதிகள் செய்யுள் வழக்குகளே இன்று இவையும் வழக்கிழந்தன.

4. தெ. வி. மு விகுதிகளிலே முன்னிலைக்குரிய இ, இர் விகுதிகள் வழக்கிழந்தன. ஈர் விகுதியுடன் கள் விகுதியைச் சேர்த்து வழங்குதலே இன்று பெருவழக்காகும்.

5. குறிப்பு வினைமுற்றுக்கும இவ்வுண்மை பொருந்தும்.

முற்றுவினை:

பொருட்பெயர் முதலாக ஆறுவகைப் பெயர்களையும் பயனிலைகளாய் ஏற்றுவரும் தெரிநிலைவினைமுற்று, குறிப்புவினை முற்று என்பன 'முற்றுவினை' எனப்பெயர் பெறும்.

உ-ம்: அடித்தான கந்தன் வரண்டது நிலம்
தலேவது கார் அழகிற்று பல்

## எதிர்மறை வினைமுற்று

செயல் நிகழ்வதைக் குறிப்பது உடன்பாட்டு வினைமுற்று. செயல் நிகழாமையைக் குறிப்பது எதிர்மறை வினைமுற்று.

(அ) தெரிநிலை வினைமுற்று எதிர்மறைப் பொருள் தரல்:
இல், அல், ஆ என்னும் எதிர்மறை இடைநிலைகள்.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| இல்—நடந்திலன் | நடக்கின்றிலன் | நடக்கிலன் |
| அல்— — | — | நடக்கலன் |
| ஆ —நடவான் | — | நடவான் |

இவ்வாறே தன்மை முன்னிலைக்குரிய விகுதிகளைப் (ஒருமை பன்மை) பெற்று அவற்றிற்குரிய எதிர்மறை வினைமுற்றுக்கள் தோன்றும். உ-ம்: நடந்திலேன், நடந்திலாய்

(ஆ) குறிப்பு வினைமுற்று எதிர்மறைப் பொருள் தரல்:

(i) அல், இல் ஆகிய இடைநிலைகள், பெற்றுக் குறிப்புவினை முற்றுக்கள் எதிர்மறைப்பொருள் தரும்.

உ-ம்: அலன், அல்லன், இலன், அலள், அல்லள், இலள்
அலை, அல்லை, இலை (இல்லாமையை உடையாய்)
அன்று (அல்+து=அன்று), அல்ல (அல்+அ=அல்ல)
அலேன், அல்லேன், இலேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றோடு சேர்த்து இருதிணை, ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவான வினைமுற்றாக வழங்குவது பொருத்தம் போலத் தெரிகிறது.

## பெயரெச்சம்

பெயரெச்சமாவது பால் காட்டும் விகுதி பெறாமையால் முற்றுப்பெறாது நிற்கும் வினைச்சொல். இது தனக்கு முடிக்குஞ் சொல்லாகப் பெயர்ச்சொல்லை அவாவி நிற்கும். தெரிநிலை வினைப் பெயரெச்சம், குறிப்புவினைப் பெயரெச்சம் என இஃது இருவகைப்படும்.

தெரிநிலைவினைப் பெயரெச்சம்:

பால்காட்டும் விகுதிக்குப் பதிலாக அ, உம் என்னும் விகுதிகளைப் பெற்றுச் செய்த, செய்கின்ற, செய்யாநின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டு வடிவங்களை முறையே கொண்டு பெயரை இறுதியாக ஏற்கும் வினைச்சொல் பெயரெச்சமாம்.

உ - ம்: உண்ட மனிதன்.
உண்கின்ற பாத்திரம்.
உண்ணாநின்ற மனிதன்.
உண்ணும் சோறு.

தெரிநிலை வினைமுற்றுக்களுக்குரிய காலங்காட்டும் இடைநிலைகள், இறந்தகாலம், நிகழ்காலம் என்பவற்றைக் காட்டும் தெரிநிலை வினைப்பெயரெச்சங்களுக்கும் பொருந்தும் எதிர்காலப் பெயரெச்சம் காலங்காட்டும் இடைநிலை பெறாது காலங்காட்டும் 'உம்' என்ற விகுதியைப் பெற்று வரும் (செய் + உம் செய்யும்).

பெயரெச்சங்கள் செய்பவனை (கருத்தாவை) முடிக்கும் சொல்லாகக் கொள்கையிற் செய்வினையாகவும், செயப்படு பொருளை முடிக்கும் சொல்லாகக் கொள்கையில் படு விகுதி கெட்டுவரும் செயப்பாட்டு வினைகளாகவும் அமையும்.

உ - ம்: உண்ட மனிதன் — உண்ட - செய்வினை.
உண்டசோறு-உண்ணப்பட்டசோறு-செயப்பாட்டுவினை.

எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்:

இஃது எதிர்மறைக்குரிய 'ஆ' என்ற இடைநிலையோடு 'த்' என்ற எழுத்தையும் ஈற்றிலே பெற்றும் அல், இல், என்னும் எதிர்மறை இடைநிலைகளோடு 'ஆ'காரச் சாரியை பெற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு + கோடி = நான்குகோடி இயல்பாகும். நாற்கோடி எனவும் வரும்.

(அ) தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றின் புணர்ச்சிக்கான சிறப்பு விதி:

ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

(நன்.எழுத் உயிரீற்றுப்புணரியல் 44)

1. *ஒன்பது+பத்து = ஒன்+பத்து — பது கெட்டது
த்+ஒன்+பத்து=தொன்+பத்து —தகர ஒற்று நிலைமொழித் தொடக்க உயிருடன் கூடிற்று

தொள் + நூறு = தொண்+ நூறு — = தொண்ணூறு — தொடர்ந்த னகர ஒற்று ணகர ஒற்றாயிற்று, பத்து நின்ற இடத்திலே நூறு வந்தது, வருமொழி நகரஒற்று நிலை மொழிக்கேற்ப ணகர ஒற்றாய் மாறிற்று.

2. *ஒன்பது+நூறு=ஒன் +நூறு —பது கெட்டது.
+ த் + ஒன்+நூறு = தொன்நூறு=தொண் ணூறு. —தகரஒற்று நிலைமொழித் தொடக்க உயிருடன் கூடிற்று னகர ஒற்று ணகர ஒற்றாகி அதற்கிசைய வருமொழித் தொடக்க 'நூ' ணூ ஆயிற்று

---

[ஒன்பது என்ற எண், முற்காலத்திலே 'தொண்டு' என வழங்கியது

தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்
(மலைபடுகடாம்-21)

தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று
(தொல்.பொருள் செய்யுளியல் 101)

என்பன எடுத்துக் காட்டுக்கள் எட்டு+நூறு, எட்டு+ஆயிரம் என்பன முறையே எண்ணூறு, எண்ணாயிரம் எனப் புணர்ந்தமை வதுபோல, தொண்டு + நூறு. தொண்டு + ஆயிரம் முறையே தொண்ணூறு, தொள்ளாயிரம் என்று புணர்தல் இயல்பானது. எட்டு+பத்து = எண்பது போலத் தொண்டு+பத்து = தொண்பது (90) என வழங்கியிருக்கலாம். வழக்குப்பயிற்சியில் ஒன்பது மிகுதியாய் இடம்பெறத் 'தொண்டு' வழக்கிறந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. இகர, உகரவீற்று மரப்பெயர் முன்பு வல்லினம் வரின் அம்முச்சாரியை வரும்.

உ-ம்: புளி+கனி; புளி+அம்+கனி=புளியங்கனி
புன்கு+கனி; புன்கு+அம்+கனி=புன்கங்கனி
(லகர ஒற்று ஈற்றில் வரினும் இவ்வாறே புணரும்)

உ-ம்: ஆல்+காய்=ஆல்+அம்+காய்=ஆலங்காய்

iii. சில உயிரீற்று மரப்பெயர்கள் முன்பு இன வல்லினம் தோன்றும்.

உ-ம்: வாழை+கனி=வாழைக்கனி
பலா+கனி=பலாக்கனி
அன்னாசி+பழம்=அன்னாசிப்பழம்.

iv ஐகாரவீற்று மரப்பெயர்கள் முன் வல்லின மெய்வரின் நிலைமொழியீற்று ஐகாரம் கெடும். அம்முச்சாரியை தோன்றும்.

உ-ம்: தோடை+பழம்=தோடை+அம்+பழம்
=தோடம்+பழம்=தோடம்பழம்
மாதுளை+கனி=மாதுளை+அம்+கனி
=மாதுளம்+கனி=மாதுளங்கனி

'தெங்கு' என்ற மரப்பெயருக்குச் சிறப்புவிதி: 'தெங்கு' என்ற மரப்பெயரேடு காய் என்பது புணர்கையில் நிலைமொழி முதல் நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும்.

தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்
(நன்.எழுத்.உயிரீற்றுப்புணரியல் 87)

உ-ம்: தெங்கு+காய்=தேங்காய்.

3. மெய்ம் முன் உயிர்வரின் நிகழ்வன:

1. நிலைமொழியீற்றிலே மெய்யெழுத்து வந்து வருமொழித் தொடக்கத்திலே உயிர் வருமாயின் இயல்பு புணர்ச்சியாக இரண்டுங் கூடி உயிர் மெய்யெழுத்தாகும்.

உ-ம்: கால்+உடைந்தது=காலுடைந்தது.

2. நிலைமொழியானது தனிக்குற்றெழுத்தும் அதனைத் தொடர்ந்து ஒற்றெழுத்தும் பெற்று வருமொழித் தொடக்கத்தில் உயிர் வருமாயின் குறித்த ஒற்று இரட்டிக்கும்.

உ-ம்:- கல் + உடை = கல் + உடை + கல்லுடை

4. மெய்ம்முன் மெய் புணரல்:

உயர்திணையின் னகர, ரகரவீற்றுப் பெயர்கள் நிலை மொழியாக நின்று வருமொழிகளோடு புணரும் பொழுது ஏற்படும் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இலக்கணத் தெளிவு”

“இலக்கணத் தெளிவு” நூலின் மூன்றாம் பதிப்பு இது. இப்பதிப்பில், முன்னைய பதிப்புக்கள் இரண்டிலும் காணப்பட்ட குறைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. புதிய உத்திகளைக் கையாண்டு, புதிய புதிய எடுத்துக் காட்டுக்களை முன்வைத்துக் கடினமான இலக்கணக் கூறுகளை இலகுவாக்கும் தன்மை இப்பதிப்பிற் காணப்படுகிறது.

எழுத்து, சொல் என்பன பற்றிய விளக்கப் பாடங்களும், சொற்றொடரியல் - புணரியல் என்பனவும் மாணவர்க்கு நிறைவான இலக்கண அறிவை, இன்றைய அறிவியல் சார் உலகின் பின்னணியில், தந்து நிற்பது இந் நூலின் சிறப்பியல்பாகும்.

அறிவியலும், தொழினுட்பவியலும் மிக வேகமாக வளர்கின்றன. இவ்வளர்ச்சியோடு தமிழ்ச் சமூகமும் ஒத்தோட வேண்டுமெனில், எமது மொழி அதற்கிசைய வளர்ந்து கொடுக்க வேண்டும். அஃத[illegible] தமிழ்மொழி புதிய வளங்கள் பெற்றுச் செ[illegible]

இதற்கு, “பழமையன தமி[illegible] வரையில் தமிழ்மொழி இல[illegible] புதிய மாற்றங்களைத் தழுவ[illegible]டும் என்ற குரல் அண்மைக்காலத்திற் பரவலாகக் [illegible]கிறது.

இதன் பொருள், பழமையனவும் சிறப்பு மிக்கனவுமான இலக்கணங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பதல்ல. இன்றைய அறிவியல், தொழினுட்பவியல், சமூகவியல், பொருளியல் மாற்றங்களுக்கு ஏற்பவும், வேற்று மொழி பேசும் பல்வேறு நாடுகளுடனான தொடர்புகளால் ஏற்படும் சொற் பிரயோகங்களுக்கு ஈடு கொடுக்கவும் எமது மொழி இலக்கணத்தில், தேவை நோக்கி, மாற்றங்கள் செய்வது இன்றியமையாதது என்பதே இதன் பொருள்.

தமிழ்மொழியின் தூய்மையைப் பேணும் அதே வேளையில், மொழியின் வளத்தையும், செழுமையையும் பெருக்க உந்துகோலாயும் உறுதுணையாயுமுள்ள “இலக்கணத் தெளிவு” என்ற இந்நூல் கல்வியுலகிற்கு அணி செய்து நிற்கிறது.

இந்நூலை வரவேற்கும் கல்வியுலகு தமிழின் செழுமையை வரவேற்பதாயமையும்.

30.12.1992 [illegible]. இராசநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org